# குடும்ப ஜெபம்

**குடும்பங்கள் மற்றும் அனைத்து வயதினருக்காக**

அன்பான குடும்பங்களே பல்வேறு வயது மற்றும் பின்னணியம் கொண்ட மக்களே,

இந்த ஆவணத்தைத் திறந்ததற்கும், உங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் நம்பிக்கையைப் பகிர்ந்துகொள்ளும் அல்லது பிறருடன் உங்கள் வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்ளும் உங்கள் விருப்பத்திற்கும் நன்றி. இந்த குடும்ப ஜெபத்தை நீங்கள் உங்கள் சொந்த வீட்டிலோ அல்லது தலைமுறைகளுக்கு இடையேயான சிறு குழுக்களிலோ பயன்படுத்த வேண்டும். குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான சர்வதேச தினத்தின் வார இறுதியில் நீங்கள் இந்த ஜெபத்தை பயன்படுத்தலாம், ஆனால் உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ற வேறு எந்த தருணத்திலும் இதைப் பயன்படுத்த தயங்காதீர்கள்.

நீங்கள் ஆசீர்வதிக்கப்படவும், கிறிஸ்துவுடனும் மற்றவருடனும் உங்கள் உறவு ஆழமாக இருக்கவும், உங்களைச் சுற்றியுள்ள மக்களுக்காக தேவன் உங்கள் இருதயத்தைத் திறக்கவும் நாங்கள் ஜெபம் செய்கிறோம்.

# வெள்ளி I அடையாளம்

## இடைநிறுத்தம் மற்றும் ஜெபம்

பிதாவே, உமது வார்த்தை என் கால்களுக்கு தீபமாகவும், என் பாதைக்கு வெளிச்சமாகவும் இருக்கட்டும்.

ஆவியானவரே, நீர் எங்களை உயிர்ப்பியும், அதனால் நாங்கள் உயிர் பெற்று எங்கள் எழுந்து நிற்போம்.

இயேசுவே, நாங்கள் செயலிலும், வார்த்தையிலும் உமது அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோம்.

ஆமென்.

## ஜீவனுள்ள வார்த்தை

*"அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான் அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்"*

*(சங்கீதம் 1:3).*

## ஜெப ஆராதனை

இந்த ஜெபத்தை நாங்கள் எழுதுகையில், உலகம் ஒரு பயங்கரமான காலமான கோவிட்-19 தொற்றுநோயிலிருந்து விலகி மெதுவாக நகர்ந்து வருகிறது. தொற்றுநோய் கட்டுப்பாடுகள் நம்மை சமூக விலகல், பயணத் தடைகள் மற்றும் லாக்டவுன்கள் மூலம் நமது நடமாட்டத்தைக் குறைக்க வலியுறுத்தியது. இரட்சிப்பின் நற்செய்தியை நாம் அறிந்த வழிகளில் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள முடியாது என்பதே இதன் பொருள். மற்ற மக்களின் வாழ்வில் ஒரு அடையாளத்தை உருவாக்க புதிய வழிகளைக் கண்டுபிடிப்பதற்கும், மனிதகுலம் அனைவருக்கும் இரட்சிப்பு, சமாதானம் மற்றும் மகிழ்ச்சியைக் கொண்டுவரும் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்வதற்கும் சவாலாக இருந்தது. (ஏசாயா 52:7).

தேவனுடைய வார்த்தைகளில் வேரூன்றிய ஒருவரை விவரிக்க வேதம் தண்ணீர் அருகில் நடப்பட்ட ஒரு மரத்தை உருவகப்படுத்துகிறது. அவன் அல்லது அவள் வாழ்க்கை மற்றும் வெளிச்சத்தைக் கொண்டுவரும் ஆண்டவரின் வார்த்தைகளில் கவனம் செலுத்தத் தேர்வு செய்யவும், மேலும் அவர்கள் தீர்ப்பு, கிண்டல் மற்றும் பொய்கள் நிறைந்த நபர்களுக்கு செவிகொடுக்க மறுக்கவும் செய்கிறார்கள். அதுதான் இரவும் பகலும் அவன் அல்லது அவளது கவனமாக இருக்க வேண்டும்.

ஒரு மரத்தைப் பற்றிய சில வேடிக்கையான உண்மைகள் இங்கே. இன்னும் சிலவற்றை நீங்களே கண்டுபிடிக்கலாம்!

- மரம் என்பது பல ஆண்டுகள் வாழக்கூடிய பெரிய தாவரமாகும்.
- ஒரு மரத்திற்கு ஒரு தண்டு உள்ளது.
- தண்டு கிளைகள் மற்றும் இலைகளை தாங்குகிறது.
- மரம் நிலத்தடியில் மறைந்திருக்கும் அதன் வேர்களால் நிற்கிறது.

• மரம் வளரத் தேவையான நீர் மற்றும் ஊட்டச்சத்துக்களை எடுத்துச் செல்வதன் மூலம் வேர்கள் மரத்தை தாங்குகின்றன.

ஒரு மரம் அதன் வலிமை மற்றும் ஆரோக்கியத்திற்கு அதன் வேர்களைப் சார்ந்திருக்கின்றது. மற்றும் பழங்கள் மூலம் மரம் எவ்வளவு ஆரோக்கியமானது மற்றும் வலுவானது என்பதை நீங்கள் காணலாம். நமக்கும் அப்படித்தான். நாம் என்ன செய்கிறோம், என்ன சொல்கிறோம் என்பதன் மூலம் இயேசுவுடனான நமது உறவின் வலிமையையும் ஆரோக்கியத்தையுப் பார்க்க முடியும். அதுதான் நமது கனி.

இயேசுவோடு நமக்குள்ள உறவு வலுவாக இருக்கும்போது, வலுவான வேர்களைக் கொண்ட மரத்தைப் போல நாம் எளிதில் அசைக்கப்படுவதில்லை. கொலோசெயருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் சொல்வது போல, நம்முடைய விசுவாசத்தின் வேர்கள் இயேசுவில் ஆழமாக வளர்கின்றன:

*'ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக.' (கொலோசெயர் 2:6-7).*

கொலோசேயில் உள்ள மக்களுக்கு பவுலின் அறிவுரை: ஒவ்வொரு நாளும் தேவனுக்கான இடத்தை உருவாக்குவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் செழிப்பீர்கள்: உங்கள் நம்பிக்கை வலுவடைகிறது, உங்கள் அன்பு அதிகரிக்கிறது மற்றும் உங்கள் மகிழ்ச்சி வளரும். நாம் ஆண்டவர் முன்னிலையில் இருக்கும்போது, நாம் பயப்படுவதில்லை. தேவன் நமக்காக வைத்துள்ள அனைத்தையும் நாம் பெறுவோம். புயல்கள் வந்து போகலாம், ஆனால் நாம் அப்படியே இருப்போம். தேவனின் உண்மையான குணம் நம்மில் வெளிப்படுகிறது.

*யோவான் 15:5ல் இயேசு கூறுகிறார்: 'நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.'* நாம் அவருடன் இணைந்திருந்தால், பலனைத் தருகிறோம் என்று இயேசு கூறுகிறார்.

நாம் கொடுக்கும் கனிகள் தான் நமது கால்தடங்கள் அதுதான் இந்த உலகில் நாம் ஏறப்படுத்தும் வித்தியாசம். நமது கனிகள் மற்றவர்களின் வாழ்க்கையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

# உரையாடலுக்கான செயல்பாடு மற்றும் கேள்விகள்

• அடுத்த பக்கத்தில் உள்ள மரத்தைப் பாருங்கள்.

• நீங்கள் எப்போது தேவனுடன் நெருக்கமாக உணர்கிறீர்கள்? உங்கள் பதில்களை தண்டுக்கு அருகில் எழுதுங்கள்.

• உங்கள் வீடு, சுற்றுப்புறம் அல்லது நகரத்தில் நீங்கள் எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்தலாம்? உங்கள் பதில்களை பழத்தின் அருகில் எழுதுங்கள்.

• பதில்களைப் பற்றி ஒருவருக்கொருவர் உரையாடுங்கள்.

• ஒருவருக்கொருவர் ஜெபம் செய்யுங்கள்.

உங்கள் பாதையில் ஒவ்வொரு அடியிலும் இயேசு இருப்பார் என்பதை அறிந்து உங்கள் அடையாளத்தை உருவாக்குங்கள்!

# குடும்பத்திற்கு சவால்

ஒரு குடும்பமாக, நீங்கள் ஒரு மரத்தை நடுவதற்கு சவால் விடப்படுகிறீர்கள். மரத்தை குடும்பத்தினர் கவனித்துக் கொள்ள வேண்டும், அது வளர தொடர்ந்து தண்ணீர் மற்றும் ஊட்டமளிப்பதை உறுதிசெய்ய வேண்டும். இந்த மரம் கிறிஸ்துவில் உங்கள் அடையாளத்தையும், நீங்கள் அவருடைய அன்பில் வேரூன்றியிருப்பதால் உலகில் நீங்கள் செய்யக்கூடிய வித்தியாசத்தையும் நினைவூட்டுகிறது.

# ஜெபம்

பிதாவே, மிகவும் கருணை மற்றும் அன்பானவரே. நீர் எங்களை நேசிக்கிறீர் என்பதையும், எங்களை ஒருபோதும் கைவிடமாட்டீர் விலக மாட்டீர் என்று வாக்குறுதி அளித்ததையும் அறிந்து நாங்கள் உமது கிருபையின் சிங்காசனத்திற்கு முன் வருகிறோம்.

ஆவியானவரே, இந்த வாழ்க்கைப் பயணத்தின் மூலம் எங்களை வழிநடத்தும், எனவே நாங்கள் இந்த பூமியில் எங்கள் அடிச்சுவடுகளை விட்டுச்செல்லும்போது எங்களைப் பற்றி பெருமைப்படக்கூடிய ஒரு வாழ்க்கையை நாங்கள் வாழ முடியும்.

இயேசுவே, நாங்கள் செய்யும் மற்றும் சொல்லும் அனைத்திலும் உமது நாமத்தையும் உமது போதனைகளையும் அறிவிக்க எங்களுக்கு உதவும்.

ஆமென்.



# சனிக்கிழமை | திசை

## இடைநிறுத்தம் மற்றும் ஜெபம்

பிதாவே, உமது வார்த்தை என் கால்களுக்கு தீபமாகவும், என் பாதைக்கு வெளிச்சமாகவும் இருக்கட்டும்.

ஆவியானவரே, நீர் எங்களை உயிர்ப்பியும், அதனால் நாங்கள் உயிர் பெற்று எங்கள் எழுந்து நிற்போம்.

இயேசுவே, நாங்கள் செயலிலும், வார்த்தையிலும் உமது அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோம்.

ஆமென்.

## ஜீவனுள்ள வார்த்தை

*'உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.' (சங்கீதம் 37:5).*

நீங்கள் எப்போதாவது ஒரு திசைகாட்டியைப் பார்த்திருக்கிறீர்களா அல்லது பயன்படுத்தியிருக்கிறீர்களா? அது வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய நான்கு முக்கிய திசைகளைக் கொண்ட ஒரு கருவியாகும். அது திசைக்காகப் பயன்படுத்தப்படுகிறது. நீங்கள் தொலைந்து போனால் உங்கள் வழியைக் கண்டறிய உதவும். நீங்கள் எப்போதாவது ஒரு GPS ஐப் பின்தொடர்ந்து முட்டுச்சந்தில் நின்றிருக்கிறீர்களா? ஒருவேளை நீங்கள் வரைபடத்தை சரியாகப் பார்க்காமல் உங்கள் பயணத்தை ஆரம்பித்திருக்கலாம்.

திசைகாட்டி அல்லது கூகுள் மேப்ஸை விட தேவன் மிகவும் நம்பகமானவர். நாம் ஒரு முகவரியைத் தட்டச்சு செய்து, அவரிடம் முதலில் கேட்காமல் ஆரம்பித்து சரியில்லாமல் போனால், அது இலக்கை நோக்கித்தான் செல்கிறதா என்பதை உறுதிப்படுத்த, பாதையைச் சரிபார்த்திருக்க வேண்டும் என்று நினைப்போம்.

சாமுவேலின் இரண்டாவது புத்தகத்தில், தாவீது யூதாவின் ராஜாவாக அபிஷேகம் செய்யப்பட்டதைக் காண்கிறோம். தாவீது அபிஷேகம் செய்யப்படுவதற்கு முன்பே தான் ராஜாவாகப் போகிறார் என்பதை அறிந்திருந்தார், மேலும் சவுல் மரணமடைந்தவுடன், அரியணை ஏறுவதற்கு இதுவே சரியான நேரமாகத் தோன்றியது. அவர் தயாராக இருந்தார். அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று கடவுளிடம் கேட்டார்.

*'பின்பு தாவீது கர்த்தரை நோக்கி: நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா என்று விசாரித்தான், அதற்குக் கர்த்தர்: போ என்றார் எவ்விடத்திற்குப் போகலாம் என்று தாவீது கேட்டதற்கு, அவர்: எப்ரோனுக்குப் போ என்றார்" (2 சாமுவேல் 2:1).*

தாவீது தனது வழிநடத்துதலைப் பற்றிய நல்ல யோசனையைக் கொண்டிருந்தார், ஆனால் தேவனைப் பற்றியும் தேவனின் வழிகாட்டுதலின் அவசியத்தையும் நன்கு அறிந்திருந்தார். ஆகவே, யூதாவின் நகரங்களில் ஒன்றிற்குச் செல்வது நல்ல யோசனையா என்று தேவனிடம் இருமுறை சோதித்தார். தேவன் இந்த திசையை உறுதிப்படுத்தினார் மற்றும் தாவீதுக்கு ஒரு விரிவான இலக்கைக் கொடுத்தார்: அது எப்ரோன்.

சில நேரங்களில் நீங்கள் செய்ய வேண்டிய தேர்வு பற்றி உங்களுக்கு நல்ல யோசனை இருக்கலாம். நான் கல்லூரிக்கு எங்கே போவது? நான் எந்த நண்பர்கள் குழுவில் சேரலாம்? தாவீதைப் போலவே, நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முடிவுகளிலும் அல்லது நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு அடியிலும் கடவுளை ஈடுபடுத்துங்கள். மேலும் நினைவில் கொள்ளுங்கள்: நீங்கள் ஆண்டவரின் பிள்ளை தேவனால் நேசிக்கப்படுகிறீர்கள், இப்போது கடவுளின் முன்னிலையில் வாழ்கிறீர்கள். இதைப் பற்றி பவுல் எழுதியதைப் பாருங்கள்:

*'முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள். ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்.' (எபேசியர் 5:8-10).*

நாம் தேவனுடன் இணைந்திருக்கும்போது - படிப்படியாக - நம் வாழ்க்கைக்கான கடவுளின் திசையைப் புரிந்துகொள்வோம். தேவப் பிரசன்னம் நம் பாதையில் பிரகாசிக்கும் ஒளி போன்றது. நமக்குப் புரியவில்லையென்றாலும், தேவனுடன் சேர்ந்து நாம் சரியான வழியில் செல்கிறோம் என்பதில் உறுதியாக இருக்க முடியும்.

தேவன் நம்மை விட மிகவும் பெரியவர். நம் வாழ்க்கை முழுவதையும் பார்க்கிறார். நீங்கள் ஆண்டவருடன் நடக்கும்போது, உங்கள் புரிதலுக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும், அவருடைய திசையை நீங்கள் நம்ப வேண்டும்.

# செயல்பாடு

தேவையான பொருட்கள்

- துணி (பழைய துணி) அல்லது காகிதம்
- லேசான கயிறு
- கத்தரிக்கோல்
- குறிப்பான்கள் மற்றும் பேனாக்கள்
- பசை மற்றம் ஸ்டேப்லர்



ஒவ்வொரு நபரும் தங்கள் சொந்த முக்கோண கொடியை உருவாக்க முடியும். உங்களுக்குப் பிடித்த வசனத்தை ஒரு பக்கத்தில் எழுதவும், கீழே உள்ள கேள்விகளில் ஒன்றிற்கு மறுபுறம் பதில் எழுதவும்:

- என் வாழ்க்கையில் தேவன் என்னை எங்கு வழிநடத்துகிறார் என்று நான் நம்புகிறேன்?
- எதிர்காலத்திற்கான எனது விருப்பம் என்ன?

அனைத்து முக்கோண கொடிகளையும் இணைக்க யாரையாவது கண்டுபிடித்து, அதை உங்கள் வீட்டில் அல்லது தேவாலயத்தில் தொங்கவிடுங்கள், அங்கு மற்றவர்கள் அங்கு ஜெபம் செய்யலாம்.

# ஜெபம்

பிதாவே, மிகவும் கருணை மற்றும் அன்பானவரே. நீர் எங்களை நேசிக்கிறீர் என்பதையும், எங்களை ஒருபோதும் கைவிடமாட்டீர் விலக மாட்டீர் என்று வாக்குறுதி அளித்ததையும் அறிந்து நாங்கள் உமது கிருபையின் சிங்காசனத்திற்கு முன் வருகிறோம்.

ஆவியானவரே, இந்த வாழ்க்கைப் பயணத்தின் மூலம் எங்களை வழிநடத்தும், எனவே நாங்கள் இந்த பூமியில் எங்கள் அடிச்சுவடுகளை விட்டுச்செல்லும்போது எங்களைப் பற்றி பெருமைப்படக்கூடிய ஒரு வாழ்க்கையை நாங்கள் வாழ முடியும்.

இயேசுவே, நாங்கள் செய்யும் மற்றும் சொல்லும் அனைத்திலும் உமது நாமத்தையும் உமது போதனைகளையும் அறிவிக்க எங்களுக்கு உதவும்.

ஆமென்.

# ஞாயிறு I பயணம்

## இடைநிறுத்தம் மற்றும் ஜெபம்

பிதாவே, உமது வார்த்தை என் கால்களுக்கு தீபமாகவும், என் பாதைக்கு வெளிச்சமாகவும் இருக்கட்டும்.

ஆவியானவரே, நீர் எங்களை உயிர்ப்பியும், அதனால் நாங்கள் உயிர் பெற்று எங்கள் எழுந்து நிற்போம்.

இயேசுவே, நாங்கள் செயலிலும், வார்த்தையிலும் உமது அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோம்.

ஆமென்.

## ஜீவனுள்ள வார்த்தை

*'இப்படி அவர்கள் பேசி, சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், இயேசு தாமே சேர்ந்து அவர்களுடனேகூட நடந்துபோனார்' (லூக்கா 24:15).*

சாகசங்கள் நிறைந்த பயணம் போல் வாழ்க்கை அமையும். நான் எனது ஆரம்ப பள்ளி பருவத்தில் மிருகக்காட்சிசாலைக்குச் சென்ற பயணம் எனக்கு நினைவிருக்கிறது. ஒரு பொருட்களை பையில் எடுத்துக்கொண்டு என் நண்பர்களுடன் பேருந்தில் சந்தோஷமாக செல்வது வேடிக்கையான நாட்கள்.

நீண்ட காலமாக பிரபலமாக இருக்கும் ஒரு அற்புதமான சொல் உள்ளது: "எல்லா காலத்திலும் சிறந்தது" "Greatest of all time". ஒருவர் இந்த பட்டத்தைப் பெறுவது அவர்கள் செய்யும் செயல்களில் சிறந்து விளங்குவது மட்டுமல்லாமல், அனைவரையும் அல்லது அவர்களைச் சுற்றியுள்ள வேறு எதையும் மிஞ்சுவது சிறந்து விளங்குவது ஆகும். ஒரு விளையாட்டு வீரரிலிருந்து ஒரு ஆட்டோமொபைல் வரை. இது பொதுவாக GOAT என்று எழுதப்படுகிறது. 'Jesus Christ Superstar' இது எல்லா காலத்திலும் சிறந்த இசைப்படைப்புகளில் ஒன்று. ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் இவர் சிறந்த விஞ்ஞானி, லயனல் மெஸ்ஸி இவர் சிறந்த கால்பந்து வீரர் மற்றும் நெல்சன் மண்டேலா இவர் எல்லா காலத்திலும் சிறந்த தலைவர்களில் ஒருவர்.

ஒருவரை எல்லா காலத்திலும் சிறந்தவராக ஆக்குவது எளிதானது. அவர் அல்லது அவள் அவர்களின் வாழ்க்கைப் பயணத்தில், குறிப்பாக தேவன் அவர்களுக்குக் கொடுத்த அறிவாற்றல் அல்லது திறமையில் சிறந்து விளங்க வேண்டும். எல்லா காலத்திலும் உண்மையான சிறந்தவர் (2,000 ஆண்டுகளாக) இயேசு கிறிஸ்து என்று சொல்வதுதான் நியாயமானது. அவரது வாழ்க்கைப் பயணத்தைப் பார்க்கும்போது, தொழுவத்தில் பிறந்து, வளர்ந்து உலகம் காணக்கூடிய மிகப்பெரிய அன்பை காட்டினார். மேலும் ஆண்டவரின் பார்வையில் நாம் அனைவரும் முக்கியமானவர்கள் என்பதை நாம் காட்ட வேண்டும்.

இன்று, லூக்காவின் வேத வசனத்தைப் பார்க்கும்போது, நாம் நடந்து செல்லும் பாதை எப்படிப்பட்டதாக இருந்தாலும், நம்முடன் தினமும் நடக்க வேண்டும் என்ற இயேசுவின் விருப்பத்தை நமக்கு நினைவூட்டுகிறது. உங்களுக்கு முன்னால் இருக்கும் சில சவால்கள் காரணமாக, இந்த நேரத்தில் நீங்கள் பாதுகாப்பற்றவராக உணரலாம். நீங்கள் தொடங்கவிருக்கும் சில நிகழ்வுகள் அல்லது சாகசங்களைப் பற்றி நீங்கள் மிகவும் உற்சாகமாக இருக்கலாம்.

உங்கள் பயணம் எப்படியிருந்தாலும்: இயேசு உங்கள் அருகில் நடந்து செல்வார். எல்லா காலத்திலும் சிறந்தவர், மரணத்தை விட வலிமையானவர், உங்களைத் தொடர்புகொள்வார். ஏனெனில் நீங்கள் தனியாக இல்லை!




இவர் ஜூலி போன்ஸ். அவளுக்கு 19 வயது. அவர் பெரு நாட்டைச் சேர்ந்தவர் மற்றும் சர்வதேச குழந்தைகள் மற்றும் இளைஞர் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக உள்ளார். இயேசுவுடனான தனது உறவைப் பற்றி அவர் பின்வருமாறு கூறுகிறார்:

'தேவன் எப்போதும் என்னுடன் இருந்து, எளிமையான மற்றும் அழகான வழிகளில் என்னை ஆசீர்வதித்துள்ளார். நான் கல்லூரியில் இருந்து இரவு தாமதமாக வீட்டிற்கு வரும்போதும், நான் விழித்தெழுந்து பறவைகள் பாடுவதைக் கேட்கும்போதும் அல்லது என் குடும்பத்துடன் வீடியோ அழைப்பை மேற்கொள்ளும் போதும் அவரைப் பார்க்கிறேன். மற்ற இளைஞர்கள் தேவனுடன் நெருங்கி பழக உதவுவதும், கடவுளுடன் உறவாடுவது என்பது பக்கத்தில் சிறந்த நண்பர்களைக் கொண்டிருப்பதைக் குறிக்கும் என்பதைப் புரிந்துகொள்ள செய்வதும் எனது கனவு ஆகும்.

# பேசுங்கள்

• இயேசு எப்போது உங்களுடன் இருப்பதாக உணர்கிறீர்கள்?

• நீங்கள் கடினமான நேரத்தைச் சந்தித்தபோது உங்களுக்கு உதவியது அல்லது உங்களை அணுகியது யார்? அவருக்கு அல்லது அவளுக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்!

# ஜெபம்

பிதாவே, மிகவும் கருணை மற்றும் அன்பானவரே. நீர் எங்களை நேசிக்கிறீர் என்பதையும், எங்களை ஒருபோதும் கைவிடமாட்டீர் விலக மாட்டீர் என்று வாக்குறுதி அளித்ததையும் அறிந்து நாங்கள் உமது கிருபையின் சிங்காசனத்திற்கு முன் வருகிறோம்.

ஆவியானவரே, இந்த வாழ்க்கைப் பயணத்தின் மூலம் எங்களை வழிநடத்தும், எனவே நாங்கள் இந்த பூமியில் எங்கள் அடிச்சுவடுகளை விட்டுச்செல்லும்போது எங்களைப் பற்றி பெருமைப்படக்கூடிய ஒரு வாழ்க்கையை நாங்கள் வாழ முடியும்.

இயேசுவே, நாங்கள் செய்யும் மற்றும் சொல்லும் அனைத்திலும் உமது நாமத்தையும் உமது போதனைகளையும் அறிவிக்க எங்களுக்கு உதவும்.

ஆமென்.

**அடிச்சுவடு - தினசரி கடவுசீட்டு செயல்பாடு**

**"எவரும் விட்டுச் செல்லக்கூடிய மிகப்பெரிய**

**மரபு மற்றவர்களின் வாழ்க்கையில்**

**நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாகும் .**

**பிறருடைய வாழ்க்கைக்கு நீங்கள் மதிப்பு சேர்க்கும்**

**போதெல்லாம்,உங்கள் மறைவுக்கும் பிறகும்**

**வாழும் காலத்தின் கால்தடங்களை**

**உங்களை அறியாமல் மணலில்**

**விட்டு செல்கிறீர்கள்**

**-எமிசோபா ஜார்ஜ்**

மனிதர்கள் இயல்பாகவே சமூகத்தோடு இருக்கிறார்கள், இதன் பொருள் உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் அநேக மக்களுடன் பழகியுள்ளீர்கள், அவர்கள் உங்கள் வாழ்க்கையில் அடிச்சுவடிகளை விட்டுச் சென்றிருக்கலாம்.

இந்த நபர் அல்லது இந்த மக்கள் உங்களுக்காக என்ன செய்தார்கள் என்பதை நீங்கள் மிகவும் அன்பாக நினைவில் வைத்திருக்கலாம். ஒருவரின் பெயரை உங்களால் நினைக்க முடியுமா? ஒருவேளை ஒரு நண்பர், ஒரு குடும்ப உறுப்பினர், உங்கள் மழலையர் பள்ளி ஆசிரியர், ஒரு ஞாயிறு பள்ளி ஆசிரியர், ஒரு இளைஞர் தலைவர் அல்லது ஒரு பாபடைஸ்தல உத்தியோகஸ்தன் ?

இந்த சிறிய பத்திரிகை கடவுசீட்டு உங்கள் வாழ்க்கையில் ஒரு அடையாளத்தை விட்டுச்சென்ற நபர்களைப் பற்றி சிந்திக்க உங்களை ஊக்குவிக்கும் மற்றும் இது இன்று உங்களை எவ்வாறு பாதித்தது.்.பாதித்தது.

இதழின் முடிவில் நீங்கள் ஒரு பட்டியலைக் காண்பீர்கள், இதன் மூலம் நீங்களும் பிற நபர்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்!

ஒவ்வொரு செயல்பாடும் எப்படி உங்களை உணர்த்தியது என்பதை ஆவணப்படுத்த மறவாதீர்கள்!

## அடிசுவடு

**வசனம் 1**

பக்கத்தில் இருந்து
தடையை கடந்து
இவ்வளவு தூரம் வந்துவிட்டோம்
தொலைதூரத்திலிருந்து எங்கள்
குரல் வெளிநாட்டிலும் கேட்டது
நல்ல நாள்களை காண காத்திருக்கிறோம்
அடையாளத்தை உருவாக்குவோம்
என அடிச்சுவடுகள் தெரிவிக்கிறது
நாம் பேச வேண்டியதில்லை, கர்த்தர் பேசிவிட்டார்
நாம் பயப்பட தேவையில்லை, சங்கிலிகள் உடைந்துவிட்டன

**கோரஸ்**

கடவுளின் வழிகாட்டுதலை
பின்பற்றுபவர்கள்
பாக்கியவான்கள்
ஒவ்வொரு நாளும் கடவுள் பேசும் வார்த்தைகளால்
எங்கள் நடைகள்
எப்போதும் வழிகாட்ட வேண்டும்.

**வசனம் 2**

வலுவாக முன்னேறி நிற்க,
இப்போது நேரம் வந்துவிட்டது
தவறைத் தவிர்த்து சரியானதைத் தேர்ந்தெடுக்க
இரவும் பகலும் நாங்கள் எங்கள்
அடிச்சுவடுகளை விட்டுச் செல்கிறோம்
ஆண்டவரே, எப்போதும் நீர் எங்கள் பக்கத்தில் இருக்கிறீர்
உமது பரிசுத்த வல்லமை எங்களுக்கு போராட உதவுகிறது
நமக்கு நம்பிக்கை மட்டுமே தேவை, கர்த்தர் வழிகாட்டுகிறார்
நமக்கு விசுவாசம் மட்டுமே தேவை, கர்த்தர் வழங்குகிறார்

## அடிச்சுவடு

**வசனம் 1**

நீரே தேவன்

நீரே தேவன்

எல்லா துதியும் உனக்கே

நீர் மட்டும்தான்

சத்தியமும்

வழியும் ஜீவனும்

நீர் எங்களை வழிநடத்தும்

எங்களை சீர்படுத்துபவர் நீர்

ஆண்டவரே நாங்கள் உம்மைப் போற்றுகிறோம்

ஆண்டவரே, தேவனே நாங்கள் உம்மைப் போற்றுகிறோம்

(இணைந்து)

நாங்கள் அல்லேலூயா பாடுகிறோம்

நாங்கள் அல்லேலூயா பாடுகிறோம்

மேலும் மனித குமாரனாகிய இயேசுவின் மூலம்

உங்கள் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறோம்

**வசனம் 2**

ஆண்டவரே எங்களை வழிநடத்தும்

பாவத்தை வெறுக்க உமது வழியில்

ஒடுக்குமுறையிலிருந்து எங்களை மீட்டருளும்

நாங்கள் கீழ்ப்படிகிறோம்

## ஜெபத்தின் வெளிப்பாடு

இந்த பதிவேடுகளைத் திறந்ததற்கு நன்றி! நீங்கள் இதை நடைமுறை படுத்துவதன் மூலம் ஜெபத்தின் முக்கியதுவம் எவ்வளவு என்பதை வெளிப்படுத்துகிறீர்கள். சர்வதேச குழந்தைகள் மற்றும் இளைஞர் தினத்தின் போது உங்கள் ஜெபநேரத்தில் உங்களுக்கு உதவ நான்கு வழிகாட்டிகளை நாங்கள் உருவாக்கியுள்ளோம். இவை அனைத்தையும் ஒரே நேரத்தில் செய்ய வேண்டியதில்லை. உங்களுக்கு தகுந்த நேரத்தை தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் வேதாகமத்தைத் திறந்து ஜெபிக்கத்தொடங்கும் போது பரிசுத்த ஆவியானவர் உங்களை வழிநடத்தட்டும்.

ஒவ்வொரு கூடுகையும் சுமார் 15 நிமிடங்கள் நடைபெறும் இதில் ஒரு வேதவாசிப்பு, ஒரு சிறிய தியானம் மற்றும் ஜெபத்திற்கான வழிகாட்டி ஆகியவை அடங்கும்.

## தலைப்புகள் பின்வருமாறு:

1. தேவனுக்குள்
2. நீயாக இரு
3. தனித்து நிற்கவும்
4. உங்கள் அடையாளத்தை உருவாக்கவும்

இந்த புத்தகம் பதின்பருவத்தினர் மற்றும் இளைஞர்களுக்காக உருவாக்கப்பட்டது. இருப்பினும், நீங்கள் சற்று வயதானவராக இருந்தாலும், இந்த புத்தகத்தை பயன்படுத்த தயங்கவேண்டாம்.

# ஜெபத்தின் வெளிப்பாடு 1| தேவனுக்குள்

***உம்முடைய வார்த்தையிலே என் காலடிகளை நிலைப்படுத்தி*** *(சங்கீதம் 119:133 ஜேஏ)* குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான சர்வதேச தினத்தின் 2023 ம் ஆண்டிற்கான நோக்கம் ***"அடிச்சுவடுகள்".*** நாம் விட்டுச்செல்லும் மதிப்பெண்கள், நம் வாழ்வில் கடவுள் வைத்திருக்கும் செல்வாக்கு மற்றும் நம் வாழ்க்கை அல்லது அல்லது நம்மைச் சுற்றியுள்ள மக்களின் வாழ்க்கையின் மூலம் கடவுள் ஏற்படுத்தக்கூடிய செல்வாக்கு ஆகியவற்றைப் பார்க்கிறோம். சங்கீதம் 119:133 ஐ சிந்தித்து தியானிப்பதன் மூலம் இந்த ஜெப தருணங்களை அரம்பிக்கிறோம். சிறிது நேரம் ஒதுக்கி, இந்த வேத வசனத்தின் வெவ்வேறு மொழிபெயர்ப்புகளைப்பற்றி சிந்திப்போம். ஒவ்வொரு பதிப்பும் தாவீது இராஜாவின் உரையின் உண்மையான கருத்து அனைசரின் பார்வையையும் பாராட்டையும் தருகிறது. வெவ்வேறு மொழிப்பெயர்ப்புகளைப் பார்க்கும் போது பரிசுத்த ஆவியிடம் சரணடைந்து, உங்கள் இதயத்தில் அவருடைய ஒளியைப் பிரகாசிக்க அவருக்கு இடமளிக்கும்படி உங்களை அழைக்கிறேன். தயங்காமல் இடைநிறுத்தப்பட்டு ஆவியானவர் உங்களுக்கு எதை வெளிப்படுத்துகிறாரோ அதற்கு இடமளிக்கவும்.

| | |
|---|---|
| KJ King James Version | உமது வார்த்தையில் என் அடிகளை ஒழுங்குபடுத்தும் |
| NKJ New King James Version | உமது வார்த்தையின்படி என் படிகளை வழிநடத்தும் |

| | | |
|---|---|---|
| NAS | New American Standard Bible 2020 | உமது வார்த்தையில் என் அடிகளை நிலைநிறுத்தும் |
| NI | New Internation Version | உமது வார்த்தையில் என் அடிகளைச் செலுத்தும் |
| AM | Amplified Bible | உமது வார்த்தையின் படியே என் அடிச்சுவடுகளை நிலைநிறுத்தும் |

'கட்டளை' 'இயக்குதல்' மற்றும் 'தோற்றுவித்தல்' ஆகிய வார்த்தைகள் வெவ்வேறு மொழிபெயர்ப்புகளில் மீண்டும் மீண்டும் பிரபலம் அடைய செய்கின்றன.

கட்டளை, இயக்குதல் மற்றும் தோற்றுவித்தல். நீங்கள் ஒரு உணவகத்தில் உணவை ஆர்டர் செய்யும் போது உங்கள் மனதில் ஒரு குறிப்பிட்ட இலக்கு இருக்கும். நீங்கள் ஒளி அல்லது நிரப்பும் ஏதாவது ஒன்றைத் தேடிக்கொண்டிருக்கலாம். உணவு எப்படி இருக்கிறது. சுவை, வாசைன அல்லது அது உங்களை எப்படி உணரவைக்கும் என்பதைப் பொறுத்து உங்கள் முடிவு இருக்கலாம். அது எதுவாக இருந்தாலும், உங்கள் இதயம் விரும்புவதை நீங்கள் ஆர்டர் செய்கிறீர்கள். கடவுள் தனது படைப்பின் மீது ஒரு குறிப்பிட்ட விருப்பத்தைக் கொண்டிருக்கிறார். மேலும் அவருடைய தெய்வீகத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அவர் நமது நடவடிக்கைகளை. அவருடைய சித்தம் மற்றும் நோக்கத்தின் படி அவர் நம் படிகளை நிலைநிறுத்துகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் 1கொரிந்தியர் 12ல் நமக்கு நினைவூட்டுகிறார். நாம் அனைவரும் கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு பகுதியாக இருந்து குறிப்பிட்ட பணியை செய்கின்றன. இந்த உடலின் எந்த ஒரு அவையவவும் மற்றொன்றை விட முக்கியமானது அல்ல. ஒரு அவையவம் சரியில்லாமல் போனால் உடல் முழுவதும் பாதிக்கப்படுகிறது. கடவுள் நம் படைப்பின் கட்டத்தில் குறிப்பிட்ட செயல்பாடுகளை மனதில் கொண்டு அவருடைய மகிமைக்காக நம் அனைவரையும் தோற்றுவித்தார்.

நீங்கள் சிலதருணங்களில் ஆச்சரியபடலாம் ஆண்டவர் என் வாழ்க்கையில் என்ன கட்டளையிட்டார் என்று நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தின் எந்த பாகம்? நீங்கள் யார் என்று கடவுள் கூறுகிறார் என்பதற்கு பல வழிகள் உள்ளன. நம்முடைய வாழ்க்கையில் எது மேம்படுகிறது என்பதை பின்வரும் பயிற்சியின் மூலமாய் முயற்சிப்போம். பரிசுத்த ஆவியானவர் நம்மை வழி நடத்த அவருக்கு இடமளிப்போம்.

## நான் யார்?

உங்கள் வாழ்க்கையில் ஐந்து பேரை நினைத்துப்பாருங்கள். அவர்கள் குடும்பம், நண்பர்கள், சகஊழியர்கள் அல்லது பள்ளி தோழர்களாக இருக்கலாம். உங்களை குறித்து மூன்று வார்த்தைகளில் விவரிக்கச்சொன்னால் அவர்கள் என்ன சொல்லுவார்கள்? சிறிது நேரம் எடுத்து, அவர்கள் என்ன சொல்வார்கள் என்பதைக் கவனியுங்கள்.

## அவர்கள் என்ன கூறுவார்கள்?

அவர்கள் இப்போது கூறியதைப் வார்த்தை உங்களுக்கு என்ன உணர்வை தருகின்றது? உங்களை விவரிக்க பயன்படுத்திய வார்த்தைகளை ஆழமாகப் பார்த்தால் ஒரு பொதுவான நோக்கம் வெளிப்படும். கவனிப்பவர், திட்டமிடுபவர் (ளுவசயவநபளைவ) படைப்பாற்றல், சமாதானம் செய்பவர் போன்ற வார்த்தைகள் வெளிப்படும்.

இந்த நோக்கம் இருப்பதற்கு ஒரு தெய்வீகக்காரணம் இருக்கிறது. இப்படித்தான் நம்மைச் சுற்றியுள்ள மக்களால் நாம் உணரப்படுகிறோம். கர்த்தர் கட்டளையிட்டபடி கிறிஸ்துவின் சரீரத்தில் நாம் வகிக்கும் பங்கை தேவன் விரும்புகிறவண்ணமாய் இது வெளிப்படுத்துகிறது, கண்ணால் பார்க்க மட்டுமே முடியும் மூக்கால் வாசனையை உணரத்தான் முடியும் வேறெந்த உதவியும் செய்ய முடியாது. இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில் நாம் பெறும் பங்கை வாழ்வதற்கான இயற்கை நீதி ஆகும். நாம் இப்போது நம்மை தேவனுக்கு முன்பதாக நிறுத்துவோம்.

### ஜெபம்

கடவுளே, நீர் என்னுடைய வாழ்க்கையில் கட்டளையிட்ட எல்லாவற்றையும் என்னைக் குறித்து தியானிக்கும் போது ...................................................... ............. நீங்கள் கட்டளையிட்டபடி, உம்முடைய உலகத்திலே நான் வாழ்வதற்கு என்னுடைய செவிகளைத் திறந்து தாரும். பிதாவே! நான் இப்போது உமக்கு நேராக திரும்புகிறேன். ஆமென்.

உங்கள் இதயத்தையும், சிந்தனையையும் மற்றும் ஆவியைத் திறந்து ஞானத்தை பெற்றுக்கொள்ளத்தக்கதாக பரிசுத்த ஆவியானவரோடு பேசு. நீ யார் என்று அவர் உனக்குச் சொல்கிறார்?

| | |
|---|---|
| எபேசியர் 2:15 | “ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிரு'டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகள் நாம் நடக்கும் படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்” |

எபேசியர் 2:15 சூரியன் தனக்காக சூடேற்றாமல் உதிப்பது போலவும், நதி தனக்காக வற்றிக்கொள்ளாமல் ஓடுவது போலவும், கடவுள் நம்மை ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக தனித்துவமாகப் படைத்தார். அவர் தம்மைப் போலவே நம்மைப் படைத்தார், அவருடைய நோக்கத்தை நிறைவேற்ற அவர் விரும்பும் இடத்திற்கு நம்மை வழிநடத்துகிறார். அவர் நம்மை தோற்றுவித்த இடத்தில், கிருபையும், பராமரிப்பு மற்றும் சமாதானம் உண்டு என்று இயேசு நமக்கு நினைவூட்டுகிறார்.

| | |
|---|---|
| யோவான் 15:5 | நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்: என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது |

நமது திறமைகள், நேரம், வளங்கள், உறவுகள், கல்வி, அனுபவம் மற்றும் பதவிகள் ஆகியவை நம் வாழ்க்கைக்கு ஜீவனாக இருக்கின்றன. சில நேரங்களில் இந்த வி'யங்கள் தேவன் நமக்கு கட்டளையிட்டதற்கு மேலாக பிறருக்கு நம்மைக்குறித்து விவரிக்க ஏதுவாக இருக்கும். கிறிஸ்துவில் நிலைத்திருப்பதற்கும், நாம் யார், என்னவாக இருக்கிறோம் என்பதை அறிய இந்த நாளை தெரிந்தெடுப்போம். அப்படியிருந்தால் மாத்திரமே நம் வாழ்க்கையில் நித்தியமான வாழ்க்கையை நாம் பெற்றுக்கொள்ள முடியும். அடுத்த சில நிமிடங்கள் நான் உங்களை அழைக்கிறேன் நாம் கா்த்தரிடத்தில் நிலைத்திருக்கும் படி நம்முடைய அடிச்சுவடுகளை அவா் நமக்கு காண்பிக்கும் பொருட்டு அவரிடத்தில் திரும்புங்கள்.

## ஜெபம்

ஆண்டவரே, நான் மெய்யான திராட்சை செடியிலிருந்து வீழ்ந்து போகும் போது என்னை பாா்த்ததற்காக நன்றி. நான் உம்மில் நிலைத்திருக்க உதவி செய்யும். நீா் என்னில் விரும்புகிற படி நான் இருக்க முயற்சி செய்கிறேன். நான் உம்மிலும் நீா் என்னிலும் நிலைத்திருப்பதால் நான் மிகுந்த கனிகளைக் கொடுப்பேன். நன்றி, ஆண்டவரே ஆமென்.

## ஜெபத்தில் நிரம்புதல் 2 | நீயாக இரு

*“உம்முடைய வார்த்தையின் படி என் கால் தடங்களைச் செலுத்தும்” (சங் 119:133NIV)*
உங்களைப் குறித்து இது போன்ற எண்ணங்கள் உங்களுக்கு எப்போதாவது ஏற்பட்டதுண்டா?

*“நான் புத்திசாலியல்ல”*
*“நான் அழகு உள்ளவனல்ல”.*
*“நான் பலமானவனல்ல”*

இந்த உலகில் போட்டி அதிகமாக காணப்படுகிறது. வேடிக்கையான தொலைக்காட்சி நிகழ்ச்சி போன்ற ஆரோக்கியமான போட்டி உள்ளது. அங்கு மக்கள் வேடிக்கையான பரிசுக்காக அல்லது தொண்டுக்காக நன்கொடைக்காக அவர்கள் நண்பர்களுடன் போட்டியிடுகிறார்கள். ஆனால் அவற்றில் ஆரோக்கியமற்ற போட்டிகளும் உள்ளது. அவற்றை வேலை, பள்ளிகூடங்கள் எல்லாவற்றிலும் அழுத்தம் அதிகமாகும்போது உணரமுடியும்.

நான் முகநூல் அல்லது இன்ஸ்டாகிராமைப் பார்க்கும் போது சிறப்பாக சிகைஅலங்காரம் செய்திருக்கும் ஜனங்களை நான் பார்க்கிறேன் அதிக சாதனை படைத்தவர்களும், என்னை விடவும் அதிகமான கவர்ச்சியான இடங்களுக்குச் சென்றவர்களாவார்கள். அவர்களின் பதிவுகளை நான் என்னோடு ஒப்பிட்டு பார்க்கும் போது நான் அந்த இடத்தில் இருப்பது போன்று உணருவேன்.

போட்டி மற்றும் ஒப்பீடு கவலை மற்றும் மன அழுத்தத்திற்கு வழிவகுக்கும் நம்மை விட வேகமான, புத்திசாலி அல்லது வலிமையான மற்றவர்களுடன் நம்மைப் போட்டியிட்டு ஒப்பிட்டு பார்க்கிறோம். இறுதிமுடிவு நம்மைப் பற்றி நாம் மோசமாக உணருகிறோம். நான் தகுதியற்றவன் என்று நினைக்கிறோம்.

இன்று நாங்கள் உங்களைக் கொண்டாடுகிறோம்! நீங்கள் இரட்டையராக இருந்தாலும் உங்களில் ஒருவர் மட்டுமே இருக்கிறார். நாம் அனைவரும் ‘அற்புதமாக உருவாக்கப்பட்டவர்கள்’ சிறப்பான மற்றும் தனித்துவமானவர்கள். சிலருக்கு நீல நிற கண்கள், சிலருக்கு பழுப்பு நிற கண்கள் சிலரால் இதைச் செய்யலாம், சிலருக்கு வலது கை, சிலருக்கு இடது கை பழக்கம். மற்றும் என்ன தெரியுமா? நீங்கள் கடவுளின் தலைசிறந்த படைப்பு!

ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். (எபேசியர் 2:10 NLT)

நீங்கள் ஒரு தலைசிறந்த படைப்பாக இருக்கிறீர்கள். செய்ய கடவுள் நற்காரியங்களை உங்களுக்காக செய்தார். எனவே, தேவன் உங்களுக்கான ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார்!. நீங்கள் கிறிஸ்து இயேசுவில் புதிதாக்கப்பட்டால் என்ன அர்த்தம் என்பதை பவுல் விளக்க முயற்சிக்கிறார்.

ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும், பூரணசற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். (கொலேசெயர் 3:12-14MSG)

இது தேவன் ஆடைகளை வரிசைபடுத்தியது போல் உள்ளது. இனிமேல் நீங்கள் மனதுறுக்கத்தின் காலுறைகள், இரக்கத்தின் சட்டைகள், தாழ்மையின் கால்சட்டைகள், வலிமையின் பெல்ட் மற்றும் ஒழுக்கத்தின் மேல்ஆடை ஆகியவற்றை அணியுங்கள். ஆனால் மிக முக்கியமாக உங்கள் அடிப்படை ஆடை எல்லா நேரத்திலும அன்பு! இயேசுவே இவ்வுலகில் கொண்டு வந்ததும் அதே அன்புதான், மக்களைக் குணப்படுத்தி, மரணத்தை வென்ற அதே அன்பு இப்போது தேவனின் குழந்தையாக உங்கள் நரம்புகளில் பாய்கிறது. இந்த அடையாளாத்தையே தழுவுங்கள். நீங்களே சிறந்த பதிப்பாக மாறுவீர்கள்!.

இதுவே நாம் தேர்ந்தெடுத்த வாழ்க்கை, ஆவியின் வாழ்க்கை என்பதால், அதை நம் மனதில் ஒரு யோசனையாகவோ அல்லது: நம் இருதயத்தில் ஒரு உணர்வாகவோ வைத்துக்கொள்ளாமல், ஒவ்வொரு விவரத்திலும் அதன் தாக்கங்களைச் செயல்படுத்துவதை உறுதிசெய்வோம். நம் வாழ்வின் அதாவது நம்மில் ஒருவர் சிறந்தவர், மற்றொருவர் மோசமானவர் என நாம் ஒருவருக்கொருவர் ஒப்பிட்டுப்பார்க்க மாட்டோம். நம் வாழ்வில் இன்னும் பல சுவாரஸ்யமான விஷயங்கள் உள்ளன. நாம் ஒவ்வொருவரும் அசல் (கலாத்தியர் 5:25-26)

வேறொருவராக இருக்க முயற்சிக்காதீர்கள். நீயாக இரு! இது நீ மேம்படுத்தவோ அல்லது வளரவோ முடியாது என்று இது அர்த்தப்படுத்துவதில்லை. வளர்ச்சி என்பது கடவுளின் திட்டத்தின் ஒரு பகுதியாகும், மேலும் நாம் நிச்சயமாக மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளலாம் மற்றும் சிறந்த செயல்களையும் அணுகுமுறைகளையும் பின்பற்றலாம். ஆனால் உங்களை மற்றவர்களுடன் ஒப்பிடுவதில் கவனமாக இருங்கள். நீங்கள் யார் என்பதில் திருப்தி கொள்ளுங்கள். நாம் ஒவ்வொருவரும் அவரவர் நோக்கத்திற்காக அவருடைய சாயலில் பூரணப்படுத்தப்பட்டுள்ளோம். கடவுள் நாம் யாராக இருக்க விரும்புகிறாரோ அப்படி இருப்பதன் மூலம் நம் நம் முத்திரையை பதிக்க முடியும்!.

## ஜெபம்

தேவனுடையக் கிருபையால் நான் என்னவாக இருக்கிறேன். தேவன் என்னை எதற்காகப் படைத்தாரோ அத்திட்டத்தை என் வாழ்வில் பூரணப்படுத்துவேன்.

## ஜெபத்தில் நிரம்புதல் 3 | தனித்து நிற்க!

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:2)

நீங்கள் பெறக்கூடிய மிகப்பெரிய பாராட்டுக்களில் ஒன்று, நீங்கள் வித்தியாசமானவர் என்று மற்றவர்கள் கூறுவதாகும். நீங்கள் ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவராக இருக்க விரும்பும் தருணங்களுக்கு இது முரண்பட்டதாகத் தோன்றலாம். அல்லது மற்றவர்களைப் போல நீங்கள் புத்திசாலியாகவும், குளிர்ச்சியாகவும், புத்திசாலியாகவும், திறமைசாலியாகவும், திறமையாகவும் இருக்க விரும்பினால் கடவுளின் குழந்தையாக உங்கள் எண்ணங்களைப் புதுப்பிப்பதன் மூலம் உள்ளிருந்து நம்மை மாற்றியமைக்கலாம் கடவுளின் ஆவியை நம்பலாம் என்பத்தை பவுல் நமக்கு நினைவூட்டுகிறார். இதன் விளைவாக, கடவுளுடைய சித்தம் என்ன, கடவுள் எது நல்லது, மகிழ்ச்சி, மற்றும் பரிபூரணத்தைக் காண்கிறார் என்பதை நாம் பகுத்தறிய முடியும்.

இதன் பொருள் என்ன என்பதை பவுல் விளக்குகிறார்.

உங்கள் மகிழ்ச்சியாக இருக்கும் போது அவர்களுடன் சிரிக்கவும், அவர்கள் கீழே இருக்கும் போது கண்ணீரை பகிர்ந்து கொள்ளுங்கள். ஒருவருக்கொருவர் பழகவும், சிக்கிக்கொள்ளாதே: யாருடனும் நட்புகொள்ளுங்கள் பெரியவனாக இருக்காதே (ரோமர் 12:13-16 ஆளுபு)

உங்களை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்துவது எது என்று பர்க்கிறீர்களா? இது உங்கள் சிந்தனை இது உங்களைப் குறித்தது அல்ல, மற்றவர்களைப் குறித்தது! தேவனுடைய ஆவி நமது புரிதலுக்கு அப்பார்பட்ட அன்பு. ஆது உங்களை நீங்களே நேசிக்கவும் மற்றவர்களுக்கு சிறந்த முறையில் பணிபுரியவும் நீங்கள் தனித்து நிற்கிறீர்கள்!

நீங்களும் தனித்து நிற்கிறீர்கள கடவுள் உங்கள்ள தனித்துவமாகப் படைத்ததால். உன்னைப் போல் இந்த உலகில் வேறு யாரும் இல்லை. நீங்கள் ஒரு வகையானவர்! உங்கள் தனித்துவம் கடவுளிடமிருந்து வருகிறது. கலாத்தியருக்கு எழுதிய கடிதத்தில் பவுல் இதைப் பற்றி எழுதியதை நினைவில் கொள்ளுங்கள். அதாவது நம்மில் ஒருவர் சிறந்தவர், மற்றொருவர் மோசமானவர் என நம் ஒவ்வொருக்கொருவர் ஒப்பிட்டுப் பார்க்கமாட்டோம். நம் வாழ்வில் இன்னும் பல சுவாரஸ்யமான விஷயங்கள் உள்ளன. நாம் ஒவ்வொருவரும் அசல் (கலாத்தியர் 5:25-26 ஆளுபு)

### நீங்கள் தனித்து நிற்பது ஏன் முக்கியம்?

உங்கள் தனித்துவத்தை காட்ட நாங்கள் உங்களுக்கு சவால் விட விரும்புகிறோம். பிறரைப் பின்பற்றுபவராக இருக்காதீர்கள். மனநிலை, சுயநலம், திமிர்பிடித்தவராக இருக்காதீர்கள். உங்கள் கருணை மற்றும் கருணையால் தனித்து நிற்பவராக இருங்கள்! தனித்து நிற்பதன் மூலம், உங்கள் தனித்துவத்தைப் பெருக்கி, கடவுளுக்கு மகிமையைக் கொண்டு வருகின்றீர்கள் நீங்கள் மற்றவர்களை இயேசுவிடம் சுட்டிக்காட்டுகிறீர்கள் நீங்கள் அவர்களை நம்பிக்கை, மகிழ்ச்சி மற்றும் பாலங்களிலிருந்து விடுவிப்பதற்கான வாழ்க்கையை சுட்டிக்காட்டுகிறீர்கள். அல்லது இடை இரட்டையர் மேரி. மேரியின்

வார்த்தைகளை சுருக்கமாகச் சொல்ல, நீங்கள் நடனமாட உங்கள் கால்களில் உள்ள கட்டுகளை அகற்றவும். மற்றவர்களை நடனத்தில் சேர ஊக்குவிக்கும் நடனக் கலைஞராக இருக்க வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார்.

## நீங்கள் எப்படி தனித்து நிற்கமுடியும்?

கவனத்தின் மையமாக இருப்பதன் மூலம் அல்ல, மாறாக நிலையான 'ஆவியின் செயலின் அன்றாட பலன்' மூலம் நம்மைச் சுற்றியுள்ளவர்களை நேர்மறையான வழியில் பாதிக்கலாம். நம்மைச் சுற்றியுள்ளவர்களை நேசிப்பதன் மூலமும், எந்தச் சூழ்நிலையிலும் மகிழ்ச்சியாக இருப்பதன் மூலமும், அமைதியைக் கொண்டு வருவதன் மூலமும் நம்மை சுற்றி இருளில் இருப்பவர்களுக்கு நாம் ஒரு கலங்கரை விளக்கமாக இருக்கிறோம். நாங்கள் தனித்து நிற்கிறோம் சாதாரண வி'யங்களை அசாதாரணமான மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் மிகுந்த உற்சாகத்துடன் தொடர்ந்து செய்வதன் மூலம் கூட்டத்திலிருந்து தனித்து நிற்பீர்கள். உற்சாகமும் உற்சாகமும் தொற்றிக் கொள்கின்றன. நீங்கள் வாழ்க்கையில் உற்சாகமாக இருக்கும் போது மக்கள் உங்களிடம் ஈர்க்கப்படுகிறார்கள்.

## நீங்கள் எப்படி வெளியே நிற்கிறீர்கள்?

சில நேரங்களில் ஒரு குழுவின் பகுதியாக இருப்பது அதன் மதிப்பு கரைக்கும் இணங்குவதாகும். சில நேரங்களில் இது உங்கள் தனித்துவம் ஆபத்தில் உள்ளது: என்று அர்த்தம் எனவே, உங்கள் தெரிவுகளை தேவனுடைய வார்த்தையின் அடிப்படையிலும் அவருடைய ஆவியின் வழிநடத்துதலின் அடிப்படையிலும் அமையுங்கள். உங்கள் ஆன்மீக குடும்பம் மற்றும் நீங்கள் நம்பும் நண்பர்களுடன் இணைந்திருங்கள். மற்றும் அவர்களின் வாழ்க்கையில் கடவுளின் நற்குணத்தை பிரதிபலிக்கும் அப்போது நிச்சயமாக நீங்கள் கடவுளாக இருப்பீர்கள், தனித்து நிற்பீர்கள்.

ஜெபத்திற்கான நடவடிக்கை:

உனக்குத் தேவைப்படும்

- காகிதம்
- பேனா
- பிரகாசமான வண்ண பெயிண்ட்
- வண்ண தூரிகை
- தீப்பெட்டி குச்சிகள்

உங்களைப் பற்றிய சிறந்த பதிப்பாக இருப்பதில் இருந்து உங்களைத் தடுத்து, உங்களை இணங்க வழி வகுத்த ஒன்றை எழுதுங்கள். இது உங்கள் இதயத்திலும் ஆன்மாவிலும் நீங்கள் சுமந்து கொண்டிருக்கும் ஒரு நிகழ்வாக இருக்கலாம், நீங்கள் வாழ்க்கையைப் பார்க்கும் விதத்தை மாற்றி கடவுளுடனான உங்கள் பயணத்தை தாங்க முடியாததாகவும் கடினமாகவும் மாற்றிய அனுபவமாக இருக்கலாம். அதை ஒளிரச் செய்யுங்கள் (உங்களுக்கு இன்னும் 18 வயது ஆகவில்லை என்றால் பாதுகாப்பாகவும் கண்காணிக்கவும்) மற்றும் கடவுள் அதைச் சுமக்கும் படி ஜெபியுங்கள் (சங்கீதம் 55:22) தீப்பெட்டிக்கு உங்கள்ள மிகவும் கவர்ந்திழுக்கும் வர்ணம் பூசி, உங்கள் எல்லா சுமைகளையும் இறைவனிடம் ஒப்படைத்துவிட்டீர்கள் என்பதை நினைவூட்டி வைத்துக்கொள்ளுங்கள், இதனால் உங்கள் பயணத்தை இலகுவாக்கவும் சுமையின்றியும் தொடரலாம். மீண்டும் தொடங்கவும், இந்த நேரத்தில் கடவுளை உங்கள் வழி செலுத்தவாகக் கொண்டு, நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் தனித்து நிற்க வேண்டும்.

நீங்கள் தேர்ந்தெடுக்கும் வர்ணம் தனித்து நிற்கவும் நினைவில் கொள்ளவும் நினைவூட்டட்டும். உலகில் உள்ள கடவுள் வர்ணங்களை வெளிக்கொணர்ந்து, ஒளியாக இருக்க நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள். கடவுள் என்பது காக்கப்பட வேண்டிய ரகசியம் அல்ல. மலையின் மீதுள்ள நகரத்தைப் போல் நாங்கள் இதைப் பகிரங்கமாகக் செல்கிறோம் (மத் 5:14 ஆளுபு)

## சவால்

தனித்து நிற்க நீங்கள் நன்கு அறியப்பட்ட நபராகவோ அல்லது பெரிய பதவியை வகிக்கவோ தேவையில்லை. உங்களைச் சுற்றியுள்ளவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் உங்கள் அடையாளத்தை உருவாக்குங்கள். உங்கள் செயல்கள் அனைத்தும் அதிலிருந்து வெளிப்படுவதால், கடவுள் உங்கள் குணத்தை தொடர்ந்து வடிவமைக்கட்டும். கடவுளில் இருங்கள், நீங்களாக இருங்கள் மற்றும் தனித்து நிற்கவும்.

நீங்கள் என்னைத் தேர்ந்தெடுக்கவில்லை, ஆனால் நான் உங்களைத் தேர்ந்தெடுத்து உங்களை நியமித்தேன். அதனால் நீங்கள் சென்று கனி கொடுக்கும் படி உங்கள் கனி நிலைத்திருக்கும் படி என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் பிதா உங்களுக்கு கொடுப்பார் இது எனது கட்டளை: ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துங்கள்.

வாழ்த்துங்கள்! உங்கள் பயணத்தில் இவ்வளவு தூரம் வந்துவிட்டீர்கள். எங்கள் பயணங்கள் அனைத்தும் வித்தியாசமானவை. எனவே உங்களுடையது என்ன என்பதை என்னால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. இது எளிதானதா? க்'டங்கள் நிறைந்ததா? இன்று நாம் நமது பயணத்தையும், பலன் தரும் வழியையும் பார்ப்போம். அல்லது வேறு வார்த்தைகளில் கூறுவதானால் நம் அடையாளத்தைத் எவ்வாறு உருவாக்குவது.

இயேசுவின் வாழ்க்கையைப் பார்க்கும் போது அது மற்றவர்களுக்கு சேவை செய்வதாகவே இருந்தது. மூன்று ஆண்டுகளில் அவர் கலிலேயா மற்றும் யூதேயா வழியாக நடந்து, சீர்களுக்கும் கூட்டங்களுக்கும் கற்பித்தார். அற்புதங்களைச் செய்தார் மற்றும் தேவாலயத்தலைவர்களைக் கண்டித்தார். அவர் நிச்சயமாக முத்திரை பதித்தார்! இன்று நீங்கள் இஸ்ரவேலுக்கு சென்றால், அவரது அடிகளைத் திரும்ப பெறுபவர்களைப் பார்க்கிறீர்கள். நிஜ வாழ்க்கையில் இயேசுவைப் பின்பற்றுவதன் அர்த்தம் என்ன என்பதை அவர்கள் இன்னும் தெளிவாக கற்பனை செய்ய முயற்சிக்கிறார்கள். மேலும் இயேசு மட்டும் பின் தொடர்ந்து மிகவும் நெருக்கமாய் பார்க்கப்படுபவர் அல்ல. நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கையும் மிக நெருக்கமாக பார்க்கப்படுகிறது. அவர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஜனாதிபதி மாளிகை அல்லது ராபன் தீவை மக்கள் பார்வையிடுகின்றனர்.

## மேலும் உள்ளன

அன்னே ∴பிராங்க், ஜனாதிபதி லிங்கன் அல்லது வில்லியம் மற்றும் கேதரின் பூத் பற்றி யோசித்துப்பாருங்கள். இரட்சணிய சேனையின் தன்னார்வலர்கள் மக்களை லண்டனின் கிழக்கு முனைக்கு சுற்றுலா அழைத்துச் சென்று, எங்கள் ஸ்தாபகரின் படிகளை மீட்டெடுத்து இரட்சணிய சேனையின் ஆரம்ப நாட்களை நினைவுப்படுத்துவது உங்களுக்கு தெரியுமா? உலகில் அத்தகைய வலுவான அடையாளத்தை விட்டுச்செல்வதை கற்பனை செய்து பாருங்கள்.

“அடிச்சுவடுகள்” என்ற சொல்லை பல வழிகளில் பயன்படுத்தலாம். தடயவியல் ஆய்வில், ஒரு குற்றம் நடந்த இடத்தில் ஒரு தடம் ஆதாரமாக இருக்கலாம். தொல்லியல் துறையில் வரலாற்றுக்கு முந்தைய வாழ்க்கையை ஆவணப்படுத்தும் புதை படிவங்களில் அடிச்சுவடுகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. நவின தொழில்நுட்ப உலகில், அடையாள அச்சுறுத்தல்களுக்கு நம்மைத் திறக்கக்கூடிய நவின தடயத்தை நாம் வழக்கமாக தற்செயலாக விட்டுவிடுகிறோம். சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்தின் மீதான நமது தாக்கத்தைப் புரிந்துக்கொள்ள உதவும் நமது சுற்றுச்சூழல் அல்லது கர்பன் தடம் உள்ளது. நாம் வாழும் முறையின் அடிப்படையில் நாம் எங்கு சென்றாலும் அடிச்சுவட்டின் தடங்களை நாம் அனைவரும் விட்டுச்செல்கிறோம். ஒரு நிமிடம் யோசித்துப்பாருங்கள். நீங்கள் என்ன பாதையை விட்டுச்செல்கிறீர்கள்? உங்கள் அடிச்சுவடுகளைத் திரும்பப் பெற்று மற்றவர்கள் பின்பற்ற வேண்டிய பாதையா? அல்லது உங்களுக்கோ அல்லது பிறருக்கோ தீங்கு விளைவிக்கும் செயல்களை நீங்கள் செய்திருப்பதால் அதற்கு அடுத்தாக ஒரு ‘ஆபத்து’ அடையாளம் கொண்ட பாறையாக இருக்கலாம். உங்கள் அடிச்சுவடுகள் எதுவாக இருந்தாலும், நீங்கள் விட்டுச்செல்லும் ஒவ்வொரு புதிய தடமும் மற்றவர்களை இயேசுவை நோக்கிச் சுட்டிக்காட்டும். அன்பின் அடிப்படையில் உங்கள் அடிச்சுவடுகளைத்த தேர்ந்தெடுக்கிறீர்களா? இந்த அன்பு தான் இயேசுவை

மற்றவர்களுக்காக தன் உயிரை கொடுக்க வைத்தது (யோவான் 15:9-10,12-13) அவருடைய அன்பான படிகளை நீங்கள் திரும்பப் பெற விரும்புகிறீர்களா? இந்த ஆடம்பரமான அன்பே, எளிதில் போதிக்கக்கூடியவர்களை மட்டுமல்ல, உங்கள் மோசமான எதிரிகள் உட்பட அனைவரையும் நேசிக்க எங்கள் இதயங்களைத் திறக்கிறது. கவலைப்படாதே! உங்களை வழி நடத்த இயேசுவே நீங்கள் அனுமதிக்கும் போது உங்கள் உத்வேகத்தின் மூலமாக அவரை அனுமதிக்கும் போது முன்னோக்கி செல்லும் பயணம் உண்மையான தாக்கத்தை ஏற்படுத்தும். இது எப்போதும் எளிதாக இருக்காது, ஆனால் அது மதிப்பிற்குரியதாக இருக்கும் நீங்கள் தனியாக பயனிக்கவில்லை!

## சவால்

நம் சொந்த அடிச்சுவடுகளைப் பற்றி ஒரு கனம்சிந்திப்போம் நீங்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தினால், உங்கள் கத்துக்கள், செய்திகள் மற்றும் படங்கள் இயேசுவின் வழியைக் காட்டுகின்றனவா? உங்கள் சமூக ஊடகத்தடம் எப்படி இருக்கின்றது? மற்றும் உண்மை உலகில் உங்களைச் சுற்றியுள்ளவர்களிடம் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? உங்கள் செயல்கள் இயேசுவை எவ்வாறு பிரதிபலிக்கின்றன? மற்றவர்களை தெய்வீக வாழ்க்கையை வாழ ஊக்குவிக்கவும், ஊக்குவிக்கவும் செல்வாக்கு செலுத்தவும் நமக்கு வாய்ப்பு உள்ளது. இந்த உலகத்தை மாற்றுவதற்கும் கடவுளுடைய ராஜ்யத்தை முன்னேற்றுவதற்கும் நமக்கு வாய்ப்பு உள்ளது.

## இதைப்பற்றி யோசிக்க!

கடவுள் உங்கள் இருதயத்தில் என்ன வைத்திருக்கிறார்? உங்கள் முத்திரையை எங்கு ஏற்படுத்தியதாக உணருகிறீர்கள்? கடவுளுடைய வார்த்தையில் சொல்லப்பட்டுள்ள அடிச்சுவடுகளில் நடக்கவும், கடவுளின் ஆவி உங்களைத் தூண்டி வழிநடத்தட்டும்.

## ஜெபம்

கடவுளே, என் படிகளில் நீர் வழி நடததுவாயாக. உமக்கு பிரியமான வழியில் நான் நடக்க என் இதயத்தை காத்துக்கொள். உங்கள் ராஜ்யத்திற்கு மக்களைக் கொண்டு வரும் ஒரு அடையாளத்தை உருவாக்க எனது செயல்களை ஊக்குவிக்கட்டும்.

# பிரசங்கத்தின் தலைப்பு: “என்னைப் பின்பற்றுங்கள்!”

## அறிமுகம் மற்றும் வரவேற்பு

உங்கள் அனைவருக்கும் வாழ்த்துகள்!

உங்கள் கைகளில் இந்தக் காகிதம் இருந்தால், குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான சர்வதேச தினத்திற்கான தேவ செய்தி உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று அர்த்தம்.

இந்த தலைப்பில் நீங்கள் உங்கள் சொந்த பிரசங்கத்தை உருவாக்க சில பின்னணிய தகவல்களையும் சில உபதலைப்புகளையும் இங்கு காணலாம். நீங்கள் ஒரு பிரத்தியேகமான நபராக இருப்பதால் ஆண்டவர் உங்களிடம் ஒரு தனித்துவமான வழியில் பேசுகிறார். ஆகவே, தேவன் சொல்வதைக் கவனமாகக் கேட்டு, அதை அறிந்து இந்தப் பிரசங்கத்தை உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்.

ஆண்டவருடனான இந்த பயணத்தை நீங்கள் முழுமையாக அனுபவித்து, அதன் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டு மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமாக இருங்கள்!

## ஒரு பிரசங்கம் செய்வது எப்படி?

